# அரியலூர் நகராட்சி

| Date of Meeting of the Council | MCR No. | Serial Number and subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|---|
| அரியலூர் நகராட்சியின் நகர்மன்ற அவசரக்கூட்டம் 05.11.2020ம் தேதி வியாழன்கிழமை காலை 11.00மணிக்கு தனிஅலுவலர் அவர்களின் தலைமையில் நடைபெறும். அது தொடர்பான கீழ்கண்ட பொருள்கள் பரிசீலினைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. | | | |
| 05.11.2020 | 366 | பொருள் எண். 01<br>அரசு ஆணை (நிலை) எண்.170, ஊரக வளர்ச்சி (மற்றும்) ஊராட்சித் (ம.அதி.3) துறை நாள்.27.10.2020ன்படி புரட்சி தலைவி அம்மா விரிவான விபத்து மற்றும் ஆயுள் காப்பீட்டுத்திட்டம் செயல்படுத்திட அரியலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களின் கூடுதல் விபரங்கள் சேகரிப்பதற்கான ஒரு குடும்பத்திற்கு ரூ.15/- வீதம் (இதில் படிவம் அச்சிடுதல் ரூ.5/-, தகவல் சேகரிப்பு பணி ரூ.5/-, தகவல்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்தல் ரூ.5/-) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் பதிவு செய்யலாம். | அனுமதிக்கப் பட்டது |
| 05.11.2020 | 367 | பொருள் எண். 02<br>அரியலூர் நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவு மற்றும் பொதுப்பிரிவு பணியாளர்களுக்கு 2020 தீபாவளி பண்டிகையை முன்னிட்டு சீருடைகள், காலணிகள் மற்றும் டெர்பன் கிளாத் ஆகியவற்றை அரசு அங்கீகாரம் பெற்ற பெரம்பலூர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகச்சாலை லிட்., பி.ஆர்.2 என்ற நிறுவனத்திற்கு ரூ.1,67,835/- வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>நகராட்சி தூய்மை பணியாளர்களின் நலன்கருதி தனி அலுவலர்களின் முன்அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப் பட்டது |
| 05.11.2020 | 368 | பொருள் எண். 03<br>அரியலூர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் இலகுரக வாகனத்தின் (TN61R4276) டயர்கள் மற்றும் டியூப்கள் பயன்படுத்த முடியாத அளவுக்கு சேதமடைந்துள்ளதற்கு பதியலாக புதிய டயர்கள் மற்றும் டியூப்கள் கொள்முதல் செய்வதற்கான உத்தேச தொகை ரூ.12,000/- மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>பொது சுகாதாரப்பணி என்பதாலும், பொதுமக்கள் நலன் சார்ந்த பணி என்பதாலும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப் பட்டது |
| 05.11.2020 | 369 | பொருள் எண். 04<br>அரியலூர் நகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலையத்தில் அம்மா உணவகம் அருகில் 41.62 ச.மீ அளவு கொண்ட கடை மற்றும் வாரச்சந்தை அருகில் உள்ள 12.26 ச.மீ அளவு கொண்ட கடை எண்.01, 02 ஆகியவை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி (வைப்புத்தொகை, சால்வன்சி தொகை மற்றும் கூடுதல் வைப்புத்தொகை நிர்ணயம் செய்யப்பட்டது) கோருவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | அனுமதிக்கப் பட்டது |

| வ. எண் | ஏல இனத்தின் விபரம் | ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலப் பொறுப்பு தொகை தனித்தனியாக | சொத்து மதிப்பு சான்றிதழ 01.01.2020க்கு பின்னர் பெற்றதாக இருக்க வேண்டும். | சொத்து மதிப்பு சான்றிதழ் இல்லாதவர்கள் செலுத்த வேண்டிய கூடுதல் பொறுப்பு தொகை |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி பேருந்து நிலையத்தில் அம்மா உணவகம் அருகில் கடை எண்.01 | ரூ.50,000/- | ரூ.2,00000/- | ரூ.50,000/- |
| 2 | இந்நகராட்சி வாரச்சந்தை வளாகத்தில் உள்ள அறை எண்.01 | ரூ.15,000/- | ரூ.50,000/- | ரூ.10,000/- |
| 3 | இந்நகராட்சி வாரச்சந்தை வளாகத்தில் உள்ள அறை எண்.02 | ரூ.30,000/- | ரூ.50,000/- | ரூ.10,000/- |

**அலுவலகக்குறிப்பு**

**மன்றம் அனுமதிக்கலாம்**

| | | | |
|---|---|---|---|
| 05.11.2020 | 370 | பொருள் எண். 05 | அனுமதிக்கப் பட்டது |

**பொருள் எண். 05**

**அரியலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டத்தினால் சேதமடைந்துள்ள சாலைகளை சிறப்பு சாலைகள் திட்டம் 2020-21 (SRP 2020 - 21)ன் கீழ் புதிய சாலைகளாக அமைத்திட திட்டமதிப்பீடு ரூ.350.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளதை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அலுவலகத்தில் சமர்ப்பித்திட கீழ்கண்டவாறு சாலைகள் தேர்வு செய்யப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும், மேற்காணும் நிதியினை இந்நகராட்சிக்கு முழுமான்யமாக விடுவிக்ககோரியும், திட்டப்பிரேரணை சமர்ப்பித்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.**

| வ. எண் | பணியின் விபரம் | சாலையின் தன்மை | சாலையின் நீளம் கி.மீ | சாலையின் அகலம் கி.மீ | மதிப்பீடு (ரூ.இலட்சத் தில்) |
|---|---|---|---|---|---|
| | சிப்பம் 1 | | | | |
| 1 | வார்டு எண்.03 எத்துராஜ் நகரில் தார் சாலை அமைத்தல் | தார் சாலை | 1.000 | 5.00 | 74.00 |
| 2 | வார்டு எண்.09 சஞ்சீவிராயன் கோவில் தெருவில் உள்ள தார் சாலை புதுப்பித்தல் | தார் சாலை | 0.400 | 4.50 | 16.00 |
| 3 | வார்டு எண்.10 வ.உ.சி தெரு மற்றும் கைலாசநாதர் கோவில் தெருவில் தார் சாலை அமைத்தல் | தார் சாலை | 1.000 | 10.50 | 110.00 |
| | கூடுதல் | | 2.400 | | 200.00 |
| | சிப்பம் 2 | | | | |
| 1 | வார்டு எண்.10 மீனாட்சி நகரில் தார் சாலை அமைத்தல் | தார் சாலை | 0.200 | 4.50 | 7.50 |
| 2 | வார்டு எண்.02 முனியப்பர் தெருவில் உள்ள தார் சாலை புதுப்பித்தல் | தார் சாலை | 0.400 | 6.00 | 21.00 |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td>3</td><td>வார்டு எண்.05 கே.கே. நகரில் தார் சாலை அமைத்தல்</td><td>தார் சாலை</td><td>0.050</td><td>5.00</td><td>5.00</td></tr>
<tr><td>4</td><td>வார்டு எண்.04 பூக்காரத்தெருவில் தார் சாலை அமைத்தல்</td><td>தார் சாலை</td><td>0.500</td><td>5.00</td><td>45.00</td></tr>
<tr><td>5</td><td>வார்டு எண்.12 கீழத்தெருவில் உள்ள தார் சாலை புதுப்பித்தல்</td><td>தார் சாலை</td><td>0.070</td><td>4.50</td><td>3.00</td></tr>
<tr><td>6</td><td>வார்டு எண்.15 பெருமாள் கோவில் தெருவில் உள்ள தார் சாலை புதுப்பித்தல்</td><td>தார் சாலை</td><td>0.200</td><td>5.00</td><td>10.50</td></tr>
<tr><td>7</td><td>வார்டு எண்.07 பங்களா தெருவில் தார் சாலை அமைத்தல்</td><td>தார் சாலை</td><td>1.230</td><td>4.00</td><td>50.00</td></tr>
<tr><td>8</td><td>நவீன எரிவாயு தகன மேடை கட்டிடத்திற்கு அணுகு சாலை புதுப்பித்தல்</td><td>தார் சாலை</td><td>0.150</td><td>5.00</td><td>8.00</td></tr>
<tr><td></td><td>கூடுதல்</td><td></td><td>2.800</td><td></td><td>150.00</td></tr>
<tr><td></td><td>மொத்தக்கூடுதல்</td><td></td><td>5.200</td><td></td><td>350.000</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு</u><br>
மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>05.11.2020</td>
<td>371</td>
<td>
<u>பொருள் எண். 06</u><br>
அரசு ஆணை (நிலை) எண்.170, ஊரக வளர்ச்சி (மற்றும்) ஊராட்சித் (ம.அதி.3) துறை நாள்.27.10.2020ன்படி புரட்சி தலைவி அம்மா விரிவான விபத்து மற்றும் ஆயுள் காப்பீட்டுத்திட்டம் செயல்படுத்திட அரியலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களின் கூடுதல் விபரங்கள் சேகரிப்பதற்கான ஒரு குடும்பத்திற்கு ரூ.15/- வீதம் (இதில் படிவம் அச்சிடுதல் ரூ.5/-, தகவல் சேகரிப்பு பணி ரூ.5/-, தகவல்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்தல் ரூ.5/-) பணிகள் மேற்கொள்ள 29.10.2020 அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
<table>
<tr><th>வ. வண்</th><th>பணியின் விபரம்</th><th>தேவி கம்ப்யூட்டர் சென்டர், அரியலூர்</th><th>S.P.S. laser Xerox & Browsing cenre, Ariyalur</th></tr>
<tr><td>1</td><td>அரியலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களின் கூடுதல் விபரம் சேகரிக்கும் விண்ணப்பம் நான்கு பிரதி எடுத்தல் (3896x4=15584 பக்கங்கள்)</td><td>1.00<br>(ஒரு நகல்)</td><td>1.50<br>(ஒரு நகல்)</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு</u><br>
1. குறைந்த விலைப்புள்ளி வழங்கிய தேவி கம்ப்யூட்டர் சென்டர், அரியலூர் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்கலாம்.<br>
2. பொதுமக்கள் நலன் சார்ந்த பணி என்பதாலும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td>அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
<tr>
<td>05.11.2020</td>
<td>372</td>
<td>
<u>பொருள் எண். 07</u><br>
அரியலூர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் இலகுரக வாகனத்தின் (TN61R4276) டயர்கள் பயன்படுத்த முடியாத அளவுக்கு சேதமடைந்துள்ள மற்றும் டியூப்கள் பதிலாக புதிய டயர்கள் மற்றும் டியூப்கள் கொள்முதல் செய்யும் பணிகள் மேற்கொள்ள அன்று பெறப்பட்ட
</td>
<td>அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
</table>

**விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.**

| வ. எண் | பணியின் விபரம் | ஸ்ரீகற்பகவிநாயக டயர்ஸ், அரியலூர் | பெஸ்ட் (MRF)டயர்ஸ், அரியலூர் | திருமலையான் டயர்ஸ், வி.கைகாட்டி |
|---|---|---|---|---|
| 1. | பொது சுகாதாரப்பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் இலகுரக வாகனத்தின் (TN61R4276) டயர்கள் பயன்படுத்த முடியாத அளவுக்கு சேதமடைந்துள்ள டயர்களுக்கு பதியலாக புதிய டயர்கள் கொள்முதல் செய்தல் | ரூ.5,600/- (ஒரு செட்) | ரூ.5,300/- (ஒரு செட்) | ரூ.5,500/- (ஒரு செட்) |

**அலுவலகக்குறிப்பு**

1. **குறைந்த விலைப்புள்ளி வழங்கிய பெஸ்ட் (MRF) டயர்ஸ், அரியலூர் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்கலாம்.**
2. **பொது சுகாதாரப்பணி என்பதாலும், பொதுமக்கள் நலன் சார்ந்த பணி என்பதாலும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை மன்றம் அனுமதிக்கலாம்.**

---

05.11.2020

373

**பொருள் எண். 08**

**அரியலூர் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் உள்ள கடைகள் மற்றும் தினசரி மார்கெட் கடைகள் குத்தகைதாரர்கள் காலம் ஆகிவிட்டதாலும் மற்றும் கடையினை தொடர்ந்து நடத்த இயலாத காரணத்தால் பெயர் மாற்றம் செய்துதரக்கோரி கீழ்கண்ட கடை கத்தகைதாரர்கள் விண்ணப்பித்துள்ளனர்.**

| வ. எண் | வரி விதிப்பு எண் | கடை எண் | குத்தகைதாரர் பெயர் | பெயர் மாற்றம் செய்யும் குத்தகைதாரர் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | 090/116 | பேருந்து நிலைய கடை எண். 22 | டி.ராணி | A. ஹாஜாமைதீன் |
| 2 | 090/129 | பேருந்து நிலைய கடை எண். 35 | ஜெயலெட்சுமி | க.அசோகன் |
| 3 | 090/131 | பேருந்து நிலைய கடை எண். 37 | ஜெயலெட்சுமி | க.அசோகன் |
| 4 | 090/157 | பேருந்து நிலைய கடை எண். 02 | S.ராமசுப்பாராயலு | ரா.சரவணன் |
| 5 | 090/158 | பேருந்து நிலைய கடை எண். 03 | ஆர்.இராஜேந்திரன் | க.அதியமான் |
| 6 | 090/4 | தினசரி மார்கெட் கடை எண். 04 | A.முத்துசாமி | மு.முருகேசன் |
| 7 | | பேருந்து நிலைய மேற்புறகடை எண். 01 | காவேரி | நாகராஜன் |

**மேலே கண்டுள்ள நகராட்சி கடைகளில் குத்தகை உரிமைத்தினை பெயர் மாற்றம் செய்து தர சம்மதம் கடிதம் தெரிவித்துள்ளனர். எனவே, அரசாணை (நிலை) எண்.92 நாள்.03.07.2007ன்படி வ. எண்.01 முதல் 5 வரையுள்ள விண்ணப்பங்கள் அனுமதியற்ற அனுபோகிதாரர்களின் நேர்வில் ஒரு முறை மட்டுமே அளிக்கப்படும் சலுவை அடிப்படையில் குத்தகை உரிமையை அவர்களுடைய பெயரில் மாற்றித்தரலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.**

**மேலும், வரிசை எண்.06 மற்றும் 07 வரையுள்ள விண்ணப்பங்கள் குத்தகைதார் இறந்துவிடும் நேர்வில் அவரின் சட்டப்படியான வாரிசுகள் (அவரின் மனைவி அல்லது கணவன் அல்லது அவர்களின் குழந்தைகள் மட்டும்) நிபந்தனைகளுக்கு இணங்கி நடக்க ஒப்புக்கொள்வதற்கு உட்பட்டு அவர்கள் குத்தகையை தொடர அனுமதிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.**

**அலுவலகக்குறிப்பு**

**குத்தகை உரிமத்தினை அரசாணை (நிலை) எண்.92 நாள்.03.07.2007ன்படி நிபந்தனைகளுக்கு உட்பட்டு பெயர் மாற்றம் செய்யலாம்.**

**அனுமதிக்கப் பட்டது**

| | | | |
|---|---|---|---|
| 05.11.2020 | 374 | **பொருள் எண். 09**<br>அரியலூர் நகராட்சி பொதுசுகாதாரப் பணிகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகளை ஒப்பந்த அடிப்படையில் (Out Sourcing) தனியார் மூலம் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறைகளில் 124 பணியாளர்களைக் கொண்டு மூன்று ஆண்டு காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் அமர்த்திக் கொள்ள நிர்வாக அனுமதி காலம் முடிவடையும் தருவாயில் இருந்ததால், அடுத்த மூன்றாண்டு காலத்திற்கு நிர்வாக அனுமதி பெற்றிட நகர்மன்ற தீர்மான எண். 65 நாள். 28.06.2019ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி தீர்மானம் ஓராண்டு காலத்திற்கு முன்னர் அப்போதைய விபரங்களின் அடிப்படையில் இயற்றப்பட்டுள்ளது. மேற்படி தீர்மானத்தின்பேரில் இதுநாள்வரை நிர்வாக அனுமதி பெறப்படவில்லை. தற்பொழுது கொரோனா வைரஸ்–19 உள்ளிட்ட அதிமுக்கியத்துவம் வாய்ந்த காரணங்களால் பொதுசுகாதாரப் பணி கூடுதலாகவும், மிகவும் கவனமாகவும் மேற்கொள்ள வேண்டிய கட்டாய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எனவே தற்போதைய விபரங்களின்அடிப்படையில் கீழ்கண்டவாறு தீர்மானம் இயற்றப்படுகிறது.<br>அரியலூர் நகராட்சி மாவட்ட தலைநகராக அமைந்துள்ளது. இந்நகராட்சி மூன்றாம் நிலை நகராட்சியிலிருந்து தரம் உயர்த்தப்பட்டு, 2010ஆம் ஆண்டு முதல் இரண்டாம் நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சியின் மொத்த பரப்பளவு 7.62 ச.கி.மீ. ஆகும். இந்நகராட்சியில் 18 வார்டுகள் உள்ளன. 2011ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, 28902 ஆகும். மிக அதிவேகமாக நிலையில் இந்நகரம் முன்னேறி வருவதாலும், இந்நகராட்சி பகுதியில் அரசு கலைக்கல்லூரி மற்றும் இதர கல்வி நிறுவனங்கள் உள்ளதாலும், திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், பெரம்பலூர் ஆகிய மாவட்டங்கள் அருகில் உள்ளதாலும், இந்நகராட்சிக்கு அருகில் புகழ்பெற்ற சுற்றுலா தலங்கள், சிமெண்ட் தொழிற்சாலைகள் மற்றும் புண்ணியத் தலங்கள் அமைந்துள்ளதால் நாள்தோறும் இந்நகருக்கு அதிகளவில் மக்கள் வந்து செல்வதாலும், அதிக மக்கள் பயன்படுத்தும் நகரமாக உள்ளது. மேலும் இந்நகரம் மாவட்ட தலைநகரத்தில் அமைந்துள்ளதால், மாவட்ட அளவில் அரசு மற்றும் அரசு சார்ந்த அலுவலகங்கள் அதிகளவில் செயல்பட்டு வருகின்றன.இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் 8607 குடியிருப்புகளும், 1992 வணிக நிறுவனங்களும் உள்ளன. இந்நகராட்சியில் நாள்தோறும் 14 மெட்ரிக் டன் குப்பைகள் சேகரமாகின்றன.<br>அரசாணை எண். 101 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 30.04.1997 திருத்திய அளவுகோலின்படி, குடியிருப்புகள், வணிக நிறுவனங்கள் அடிப்படையில் 169 துாய்மைபணியாளர்கள் தேவைப்படுகின்றனர். இந்நகராட்சியில் நிரந்தர பணியிடத்தில் 45 பணியிடம் அனுமதிக்கப்பட்டு, தற்சமயம் 39 துாய்மைபணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மீதமுள்ள 6 பணியிடங்கள் பணி ஒய்வு மற்றும் பணியிடை மரணம் காரணமாக காலியாக உள்ளது. மேலும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை செயல்படுத்துவதற்கு மீதமுள்ள 124 துாய்மைபணியாளர்களை தனியார் நிறுவனத்தின் மூலம் ஒப்பந்த அடிப்படையில் நியமித்துக் கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டு துாய்மைபணியாளர்களை தனியார் நிறுவனத்தின் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணி நியமனம் செய்து கொள்ள உத்திரவிடப்பட்டுள்ளது.<br>இந்நகராட்சியில் பொதுசுகாதார துாய்மைபணியினை தனியார் நிறுவனத்தின் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணிகள் மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறைகள் கடிதம் ந.க.எண். 1317/பி3/2016. நாள். 02.06.2016ன்படி 124 துாய்மைபணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணிகள் மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, 23.09.2016 முதல் 124 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.<br>பொதுசுகாதார துாய்மைபணிகள் ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணியாளர்களுக்கு அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் அனுமதிக்கப்படும் தினக்கூலி அடிப்படையிலான ஊதியத்தை வழங்க | **அனுமதிக்கப் பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | | அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே இந்நகராட்சியின் பொதுசுகாதார துாய்மைபணிக்கு தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் **124** துாய்மைபணியாளர்களை பணியமர்த்திக் கொள்வதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களால் அனுமதிக்கப்பட்ட மூன்றாண்டு காலம் முடிவடைந்த நிலையில், மேலும் மூன்றாண்டு காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் துாய்மைபணியாளர்களை கொண்டு பணிகள் மேற்கொள்வதற்கும், துாய்மைபணியாளர்களை நியமனம் செய்வதற்கும் நிர்வாக அனுமதி பெறுவதற்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களின் வழியாக நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களால் மேலும் மூன்றாண்டு காலத்திற்கு நிர்வாக அனுமதி வழங்க கோரி மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br>**மன்றம் அனுமதிக்கலாம்**. | |
| 05.11.2020 | 375 | **<u>பொருள் எண். 10</u>**<br>இந்நகராட்சியில் 124 பணியாளர்களை **3** ஆண்டுகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் பெற்று பொதுசுகாதார பணியினை தனியார் மூலம் மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறைகள் கடிதம் ந.க.எண்.41317/பி3/2016, நாள்.02.06.2016–ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் வழங்குவதற்கு நகர்மன்ற தீர்மானம் எண். **1358** நாள். 22.07.2016–ல் அனுமதி அளிக்கப்பட்டது. அதன்படி, இவ்வலுவலக செயல்முறைகள் கடிதம் ந.க.எண். 373/2012/எச்1, நாள். 23.09.2016-ல் **124** பணியாளர்களை 23.09.2016 முதல் **22.09.2017** முடிய ஓராண்டு காலத்திற்கு Our Land Engineering Works Private Limited Chennai என்ற நிறுவனத்திற்கு அனுமதி ஆணை வழங்கப்பட்டது.<br>அதனை தொடர்ந்து நகர்மன்ற தீர்மானம் எண். 98, நாள். 06.10.2017–ன்படி இவ்வலுவலக கடிதம் ந.க.எண். **373**/2012/எச்1, நாள். **23.09.2017–**ன்படி 23.09.2017 முதல் 22.09.2018 வரை ஓராண்டு காலத்திற்கு மேற்படி, நிறுவனத்திற்கு அனுமதி நீட்டிப்பு செய்து வழங்கப்பட்டது. மேலும் நகர்மன்ற தீர்மானம் எண். 293, நாள். 30.07.2018–ன்படி இவ்வலுவலக கடிதம் ந.க.எண். **373**/2012/எச்1, நாள். **17.08.2018–**ன்படி 23.09.2018 முதல் 22.09.2019 வரை ஓராண்டு காலத்திற்கு மேற்படி, நிறுவனத்திற்கு அனுமதி நீட்டிப்பு செய்து வழங்கப்பட்டது. 124 பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்ய அனுமதிக்கப்பட்ட **3** ஆண்டு காலம் முடிவுற்ற நிலையில் துாய்மைபணியின் அத்தியாவசியம் கருதி இந்நகர் மன்ற தீர்மான எண்.129 நாள்.31.10.2019ல் இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.373/2012/எச்1, நாள். **03.09.2019–**ன்படி மேற்படி 124 பணியாளர்களை 23.09.2019 முதல் 22.03.2020 முடிய மேலும் 6 மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்யப்பட்டது. மேலும், இந்நகர்மன்ற தீர்மானம் எண். **273**, நாள். **20.03.2020–**ல் **23.03.2020** முதல் மேலும் **3** மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்யப்பட்டு Our Land Engineering Works Private Limited Chennai நிறுவனத்திற்கு நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி வழங்கப்பட்டது. மேற்படி, நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட அனுமதிகாலம் **22.09.2020**–ல் முடிவடையவுள்ளது.<br>இந்நகராட்சிக்கு ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட **124** பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரி நியமனம் செய்வதற்கான நிர்வாக அனுமதி கோரி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் வழியாக நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு இவ்வலுவலக ந.க.எண்.**373/2012/எச்1** நாள்.**01.08.2020**ன் மூலம் முன்மொழிவுகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற்படி முன்மொழிவுகள் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு மேலனுப்பி வைக்கப்பட்டு அவர்களின் உத்திரவு எதிர்நோக்கும் நிலையிலுள்ளது.<br>தற்சமயம் கொரோனா வைரஸ்–**19** நோய் உலகலாவிய தொற்று நோயாக அறிவிக்கப்பட்டுள்ளதால் கொரோனா வைரஸ் தடுப்பு மற்றும் முன்னெச்சரிக்கை பணி மிகவும் தீவிரமாக செயல்படுத்தப்பட்டு வரப்படுகிறது. பொது சுகாதாரம் பணியின் அவசரம் அவசியம் மற்றும் கொரோனா வைரஸ் பாதுகாப்பு– தடுப்பு | **அனுமதிக்கப் பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | | முன்னெச்சரிக்கையின் அத்தியாவசத்தை கருதி மேற்படி 124 பணியாளர்களை மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு மறுநியமனம் செய்து உத்திரவு பிறப்பிக்கப்படும் நாள்வரை ஏற்கனவே, ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள நிறுவனத்திற்கு அதே விலைவிகிதத்தில் நீடிப்பு செய்து தர சம்மதம் பெற்று இந்நகரின் பொதுசுகாதாரம் பணியினை தங்கு தடையின்றி மேற்கொள்ள துாய்மைஆய்வாளர்கள் அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.<br>மேற்படி துப்பரவு ஆய்வாளர்களின் அறிக்கையின்படி புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோரி பணியாளர்கள் நியமனம் செய்திடும் வரை 124 பணியாளர்களை ஏற்கனவே வழங்கப்பட்ட அதே விலை விகிதத்தில் வழங்க சம்மதம் இருப்பின் அதனை எழுத்து மூலமாக தெரிவிக்குமாறு இவ்வலுவலக ந.க.எண்.373/2017/எச்1 நாள். 14.08.2020–ன் தேதிய அறிவிப்பின்படி தற்போதைய ஒப்பந்ததாரரான Our Land Engineering Works(Pvt)Ltd என்ற நிறுவனத்திற்கு அறிவிப்பு அனுப்பி வைக்கப்பட்டது.<br>மேற்படி Our Land Engineering Works Private Limited Chennai என்ற நிறுவனம் 20.08.2020–ம் தேதிய தனது கடிதத்தில் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட செயல்முறை உத்தரவில் கண்டுள்ள நிபந்தனைகளின்படி அதே விலைவிகிதத்தில் ஒப்பந்நதபுள்ளி கோரி மேற்படி பணியாளர்களை நியமனம் செய்திடும் வரை ஏற்கனவே அளித்த விலை விகிதம் மற்றும் அதில் காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு 124 பணியாளர்களை வழங்கிட சம்மதம் தெரிவித்துள்ளனர் தற்சமயம் கொரோனோ வைரஸ்-19 தடுப்பு மற்றும் முன்னெச்சரிக்கை பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாலும் வழக்கமான பொது சுகாதார பணிகள் பாதிக்காமல் தங்கு தடையின்றி மேற்கொள்வதற்கும் இப்பணியின் அத்தியாவசியம் கருதி மீண்டும் ஒப்பந்தப்புள்ளி கோரி பணியாளர்கள் நியமனம் செய்யப்படும் காலம் வரை ஏற்கனவே உள்ள விலை விகிதம் மற்றும் நிபத்தனைகளின்படி 124 பணியாளர்களை Our Land Engineering Works Private Limited Chennai என்ற நிறுவனத்தின் மூலம் பெற்று தங்குதடையின்றி பொதுசுகாதாரப்பணி மேற்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.<br><u>**அலுவலகக்குறிப்பு**</u><br>**மன்றம் அனுமதிக்கலாம்**. | |
| 05.11.2020 | 376 | <u>**பொருள் எண்.** 11</u><br>இந்நகராட்சியில் அரசினர் பள்ளி கழிவறைகளை சுத்தம் செய்யும் பணிக்கு 8 பணியாளர்களைக் கொண்டு, தூய்மை பணி ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்வதற்கு, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அலுவலக கடிதம் எண்.32050/J2/2016–1, நாள்.07.12.2016ல் வழங்கப்பட்ட அறிவுரைகளின்படி, 15.11.2017ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, நகர்மன்ற தீர்மான எண். 163 நாள். 13.03.2018ல் அனுமதி அளிக்கப்பட்டது. அதன்படி இவ்வலுவலக செயல்முறைகள் ந.க.எண். 6270/எச்1/2017 நாள். 15.11.2017ல் 8 பணியாளர்களைக் கொண்டு 15.11.2017 முதல் 14.11.2018 முடிய ஓராண்டு காலத்திற்கு Ourland Engineering Works Pvt Ltd., என்ற நிறுவனத்திற்கு அனுமதி ஆணை வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து இந்நகர்மன்ற தீர்மான எண். 93 நாள். 30.08.2019ல் 15.11.2018 முதல் 14.11.2019 முடிய ஓராண்டு காலத்திற்கு மேற்படி நிறுவனத்திற்கு காலநீட்டிப்பு அனுமதி வழங்கப்பட்டது.<br>மேலும் இந்நகர்மன்ற தீர்மான எண். 132 நாள். 31.10.2019ல் 15.11.2019 முதல் 14.11.2020 முடிய ஓராண்டு காலத்திற்கு அனுமதி நீட்டிப்பு வழங்கப்பட்டது. மேற்படி நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட அனுமதி காலம் 14.11.2020 முடிய உள்ளதால், அரியலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள அரசினர் மேல்நிலைப்பள்ளி, அரசினர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, ஊராட்சி மன்ற துவக்கப்பள்ளி (கிழக்கு) மற்றும் ஊராட்சி மன்ற துவக்கப்பள்ளி (மேற்கு) ஆகிய நான்கு பள்ளிகளில் உள்ள கழிவறைகள் சுத்தம் செய்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும், ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று பணிகள் மேற்கொள்வதில் ஏற்படும் காலதாமதத்தினை கருத்தில் கொண்டு, தற்சமயம் கொரோனா வைரஸ்–19 நோய் உலகலாவிய தொற்று நோயாக அறிவிக்கப்பட்டுள்ளதால் கொரோனா வைரஸ் தடுப்பு மற்றும் | **அனுமதிக்கப் பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | | முன்னெச்சரிக்கை பணி மிகவும் தீவிரமாக செயல்படுத்தப்பட்டு வரப்படுகிறது. பொது சுகாதாரம் பணியின் அவசரம் அவசியம் மற்றும் கொரோனா வைரஸ் பாதுகாப்பு தடுப்பு முன்னெச்சரிக்கையின் அத்தியாவசத்தை கருதி, ஏற்கனவே, ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள நிறுவனத்திற்கு அதே விலைவிகிதத்தில் 15.11.2020 முதல் 14.11.2021 முடிய ஓராண்டு காலத்திற்கு காலநீட்டிப்பு அரசினர் பள்ளிகளில் உள்ள கழிவறைகளை சுத்தம் செய்தல் மற்றும் பராமரிப்பு பணிகளை Ourland Engineering Works Pvt Ltd., நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br>பள்ளி மாணவர்கள் நலன் சார்ந்த பணி என்பதாலும், பொது சுகாதாரப்பணி என்பதாலும் ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதால் ஏற்படும் காலதாமதம் மற்றும் நிதியிழப்பினை கருத்தில் கொண்டு ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கப்பட்ட Our land Engineering works Pvt ltd., Chennai என்ற நிறுவனத்தின் மூலம் ஓராண்டு நீட்டிப்பு செய்திடவும், பணியின் அவசரம் அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை மன்றம் அனுமதிக்கலாம். | |